முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

11.07.2024

1. கந்தனே தங்கி அருள் செய்யும்
கருணைமிக்க ஞானசபை
எந்தன் பிரணவக் குடிலப்பா
இணையிலா தருமத்தை மெச்சி

2. மெச்சியே வள்ளலாரும் வந்து
மேலாக அருளும் தரும சபையப்பா
அச்சமிலா சன்மார்க்க நெறியை
அகிலத்துக்கே தருகின்ற ஓங்கார சபையப்பா

3. அப்பனே பிரணவக் குடிலுக்கும்
அன்னதான சேவைக்கும் தொண்டர்கட்கும்
காப்புத்தந்து அரங்கமகான் யானும்
கருணைபட குரோதி மிதுன திங்கள் குருவார

4. குருவார அருளாசி வழங்குவேன்
குறைவிலா தொண்டர் பெருமக்களை
குருவரங்கன் கவனித்தும் காத்தும்
குறைவின்றி வழிநடத்துவேன் அப்பா

5. அப்பனே தொடர் குருபூசை
அரங்கன் என் ஜீவதடத்தில்
தப்பாமல் தொடர்ந்து நடத்திட
தரணியெங்கும் தொண்டர்களை அழைத்து

6. அழைத்துமே பிரணவக்குடிலில்
அரங்கன் என் வெளிப்பாட்டை
உலக மக்களும் அறிய உணர வகைசெய்வேன்
உயர்வான அன்னதான சேவைக்கு

7. சேவைக்கு உண்டான முக்கியத்துவம்
செயல்படுத்த தேவைக்கான பொருளாதாரம்
அவணியில் மக்கள் தேடிவந்தருள
அரங்கன் யான் வழிவகை செய்வேன்

8. செய்வேன் தொடர் பூசைவழி
சில சித்திகளும் சூட்சும சக்திகளும் ஆக
அய்யன் அரங்கமகான் அற்புதத்தை
அமர்ந்த சோதி மண்டபத்தில் நடத்துவேன்

9. நடத்திட சன்மார்க்கத் தொண்டர்களும்
ஞானவான்களும் தருமவான்களும் வாழ்க வாழ்க
சுடராக அரங்கன் யான் காட்சிதர
செகத்தோர் எல்லாம் ஓங்காரக்குடிலுக்கு வருக வருக
அரங்கமகான் அருளாசி முற்றே.

–சுபம்–